பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir


மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 06 திங்கட்கிழமை 22.11.2021 கதிர் 245

## 10 பேர் கைது!

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும்பொலிஸார்மேற்கொண்டவிசேடசோதனை நடவடிக்கையின்போது பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 10 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு - கிராண்டபாஸ், முகத்துவாரம் ஆகிய பகுதிகளில்மேற்கொள்ளப்பட்டசோதனை நடவடிக்கையின்போது 15 கிராம் ☞2



## ‘காலைக்கதிர்’ ஸ்தாபக ஆசிரியர் கானமயில்நாதன் நம்மைப் பிரிந்தார்

இலங்கையின் மூத்த தமிழ்ப் பத்திரிகையாளரும் ‘காலைக் கதிர்’ நாளிதழின் ஸ்தாபக ஆசிரியரும் பிரதம ஆசிரியருமான ம.வ.கானமயில்நாதன் (வயது 79) இன்று விடிகாலை காலமானார் என்ற தகவலை மனவருத்தத்துடன் தமிழ் கூறும் நல்லுலகுக்கு அறியத் தருகின்றோம்.

மூப்பு, தளர்ச்சி, நோய் காரணமாக சில வருடங்கள் ஊடகப் பணியிலிருந்து ஓய்வு பெற்றிருந்த ☞2



2016இல் ‘காலைக்கதிர்’ மலர்வை ஒட்டிய ’விடியல் வீச்சு!’ நாளிதழை அப்போதைய எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் வெளியிட, வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் முதல் பிரதியைப் பெறுகின்றார். அருகில் ‘காலைக்கதிர்’ நாளிதழின் ஸ்தாபக ஆசிரியர் ம.வ.கானமயிலநாதன்.

சாவகச்சேரி, மல்லாகம், பருத்தித்துறை நீதிமன்றங்களால்

# மாவீரர் நிகழ்வுக்குத் தடை உத்தரவு கோரும் விண்ணப்பங்கள் தள்ளுபடி

**13 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கு ஏமாற்றம்**

**(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)**

**மாவீரர் நாள் நிகழ்வுக்குத் தடை விதிக்கக் கோரி பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட விண்ணப்பங்களை சாவகச்சேரி, மல்லாகம் மற்றும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றங்கள் இன்று தள்ளுபடி செய்து கட்டளையிட்டன.** ☞2


## ஐந்து விபத்துக்களில் ஐவர் பரிதாபச் சாவு!

நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற 5 விபத்துக்களில் ஐவர் மரணமடைந்தனர் என்று பொலிஸ் தலைமையகம் இன்று வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக மாத்தறை, தெனியாய ☞2

மந்திகையில் இடம்பெற்ற விபத்தில்

## மைக்கல் விளையாட்டுக்கழக இளம் வீரர் பரிதாப உயிரிழப்பு



யாழ். வடமராட்சியில் இடம்பெற்ற கோர விபத்தில் மைக்கல் விளையாட்டுக்கழக இளம் வீரா பரிதாபகரமாக உயிழந்துள்ளார்.

மந்திகையில் நேற்றிரவு 8 மணியளவில் இடம்பெற்ற விபத்திலேயே அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மாலுசந்திமைக்கல்விளையாட்டுக்கழகத்தின் ☞2


## முல்லைத்தீவில் 2 பேர் கொரோனாவால் சாவு

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகி மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர்

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட 44 வயதுடைய மாறா இலுப்பை, நெடுங்கேணியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். ☞2

## வேலணையில் சகதிக்குள் சிக்கியுள்ள மாணவர்கள்!

**விபத்துக்களும் அதிகரிப்பு**



யாழ்., வேலணை - சரவணைப் பகுதியில் வீதி சகதியாகக் காணப்படுவதால் விபத்துச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

சரவணை – ஊர்காவற்துறை வீதி புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வரும் வேளை யில், புனரமைப்புப் பணிக்காக வீதியில் போடப்பட்ட மண், மழை காரணமாக சகதியாக மாறியுள்ளது.

இதனால் அப்பகுதியில் பயணிப்பவர்கள் கடும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர். ☞2

## ஆசிரியரைத் தாக்கிவிட்டு தப்பியோடிய மாணவர்கள்

ஆசிரியர் ஒருவரைக் கூரிய ஆயுதத்தால்தாக்கிவிட்டுமாணவர்களான சிறுமியும், சிறுவனும் தப்பியோடிய சம்பவம் காலி, போத்தல - காசிதெனிய பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.

ஆசிரியரின் வீட்டுக்கு ஒட்டோவில் சென்ற 16 வயதுடைய ☞2

## சடலம் மீட்பு

சந்தேகத்துக்கிடமான முறையில் மரணமடைந்த ஆண் ஒருவரின் சடலத்தைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கேகாலை, புளத்கொஹுப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹிக்கொட பிரதேசத்தில் இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது. ☞2

## வவுனியா மேலதிக அரச அதிபருக்கு கொரோனா உறுதி

**(வவுனியா நிருபர்)**

வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபருக்கு ☞2

## யாழில் திருட்டில் ஈடுபட்ட இருவர் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது!

யாழ்ப்பாணத்தில் வீடு உடைத்து திருட்டில் ஈடுபடும் இருவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடம் இருந்து நகைகளும் பணமும் மீட்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த முதலாம் திகதி யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருப் பகுதியில் வீடு உடைக்கப்பட்டு ஆறு பவுண் நகையும், ஒரு தொகைப் பணமும் திருடப்பட்டிருந்தன.

சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவர்களால் முறையிடப்பட்டிருந்தது. ☞2



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## மைக்கல் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளம் வீரரான கண்ணன் காந்தன் (வயது 22) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## வவுனியா மேலதிக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் அவர் இன்று முன்னெடுத்து துரித அன்டிஜன் பரிசோதனையில் அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து அவர் சிகிச்சைக்காகத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமையுடன், அவருடன் தொடர்புடையவர்களையும் தனிமைப் படுத்த சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அத்துடன், மீண்டும் கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் நிலையில் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைத் தொடர்ந்தும் பின்பற்றுமாறு சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர். (100)

## ஆசிரியரைத் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுமியும், சிறுவனொருவனும் நேற்றிரவு ஆசிரியரைக் கூரிய ஆயுதத்தால் தாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனப் போத்தல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பத்தேகம புனித அந்தோனியார் கல்லூரியில் கடமையாற்றும் 45 வயதுடைய ஆசிரியரே இவ்வாறு காயங்களுடன் பத்தேகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

காயமடைந்த ஆசிரியர், மேற்படி சிறுமியின் தாயாருடன் தகாத உறவைப் பேணி வந்துள்ளார் எனவும், இது தொடர்பில் ஆசிரியரின் வீட்டுக்குச் சென்று வினவியபோது ஏற்பட்ட வாக்குவாதத்தில் குறித்த சிறுமி ஆசிரியரைக் கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் போத்தல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## முல்லைத்தீவில் 2 பேர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட இவர் கொரோனாத் தொற்று ஏற்பட்ட நிலையில் முல்லைத்தீவுமாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவரின் உடலம் கொரோனா விதிமுறைகளுக்கு அமைய எரியூட்டுவதற்காக இன்று வவுனியா, பூந்தோட்டம் மின் தகன மேடைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த கூழாமுறிப்புப் பகுதியைச் சேர்ந்த 78 வயதுடைய முருகன் கோபால் என்பவரும் கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளார்.

இவரின் உடலமும் எரியூட்டுவதற்காக வவுனியா, பூந்தோட்டம் மின் தகன மேடைக்கு இன்று எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் இதுவரை 55 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழில் திருட்டில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்பாடு தொடர்பில் யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் குருநகர் பகுதியைச் சேர்ந்த 22 மற்றும் 28 வயதுகளையுடைய நபர்கள் என்றும், அவர்களிடம் இருந்து ஆறரைப் பவுண் நகை மற்றும் ஒரு தொகைப் பணம் என்பன மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர்கள் வேறு பகுதிகளில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களா என்ற கோணத்திலும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## ஐந்து விபத்துக்களில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி சென்று வடிகானொன்றில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்துநரும் மோட்டார் சைக்கிளின் பின்னால் பயணித்த நபரும் தெனியாய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது மோட்டார் சைக்கிள் செலுத்துநர் மரணமடைந்தார். கோட்டபொல பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயது நபரே இவ்வாறு மரணமடைந்தார்.

இரத்தினபுரி பெல்மடுல்ல வீதி, பாத்தகொட பிரதேசத்தில் லொறியொன்று மற்றுமொரு லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் ஒரு லொறியின் சாரதி படுகாயமடைந்த நிலையில் இரத்தினபுரி வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது மரணமடைந்தார். கடவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயது நபரே உயிரிழந்தார்.

இதேவேளை, மாத்தளை - கண்டி வீதி, வரக்காமுர பிரதேசத்தில் கண்டி நோக்கிப் பயணித்த வானொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து கொங்கிறீட் தூண் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்த வானின் சாரதி, மாத்தளை வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது மரணமடைந்தார். வரக்காமுர பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயது நபரே உயிரிழந்தார்.

மாத்தறை, திஹகொட பொலிஸ் பிரிவு, ஹக்மன வீதி நாதுகல பிரதேசத்தில் மாத்தறை நோக்கிப் பயணித்த ஓட்டோ வேகக்கட்டுப்பாட்டை இழந்து, எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மற்றும் பாதசாரி பெண்ணொருவர் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த ஓட்டோ சாரதி மற்றும் பாதசாரி பெண் ஆகியோர் மாத்தறை வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது ஓட்டோ சாரதி மரணமடைந்தார். நாமினி பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயது நபரே உயிரிழந்தார்.

கேகாலை, ருவன்வெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரக்காபொல கரவனெல்ல வீதியில் வரக்காபொல நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸொன்று பாதசாரி பெண்ணொருவர் மீது மோதியுள்ளது. விபத்தில் படுகாயமடைந்த பெண், கரவனெல்ல வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது மரணமடைந்தார். ரூவன்வெல பிரதேசத்தைச் சேர்ந்த 75 வயது நபரே உயிரிழந்தார்.

## வேலணையில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட நடந்து செல்வோர் பெரும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர்.

அதேவேளை, வீதியில் சைக்கிள், மோட்டார் சைக்கிளில் செல்பவர்களும் சகதிக்குள் சிக்கி விபத்துக்குள்ளாகி வருகின்றனர்.

எனவே, விரைந்து புனரமைப்புப் பணிகளை முடிக்குமாறும், இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்துமாறும் அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

## சடலம் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹிக்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயது நபரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

பிரதேச மக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

பிரேத பரிசோதனைக்காக கேகாலை வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் புளத்கொஹூப்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மாவீரர் நிகழ்வுக்குத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விண்ணப்பங்களில் பிரதிவாதிகளினால் குறிப்பிடப்பட்டுள்ளோர் குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவை மற்றும் கொரோனா தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறி செயற்பட்டால் நடவடிக்கை எடுக்க முடியும். எனினும், குற்றமிழைக்கப்படலாம் என்ற அடிப்படையில் தடை உத்தரவு கட்டளை வழங்க முடியாது என்று விண்ணப்பங்கள் நீதிவான் நீதிமன்றங்களால் தள்ளுபடி செய்யப்பட்டன.

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட இரண்டு பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், மல்லாகம் நீதிவான் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட 8 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் மற்றும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற எல்லையிலுள்ள 3 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளால் இந்த விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

குற்றவியல் நடவடிக்கை சட்டத்துக்கு அமைவாகவும், பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் படியும், இந்த நிகழ்வை நடத்துவது குற்றம் என்றும், இதனைத் தடை செய்யுமாறும் பொலிஸார் கோரியிருந்தனர்.

தற்போது நாட்டில் நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி பொதுமக்களை அணிதிரட்ட முடியாது என்றும் பொலிஸார் குறிப்பிட்டிருந்தனர்

விண்ணப்பங்களின் பிரதிவாதிகளாக அரசியல் கட்சி பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமகன்கள் சிலர் பெயரிடப்பட்டிருந்தனர்.

இந்த விண்ணப்பங்களின் பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டு இன்று பரிசீலனைக்கு எடுக்கப்பட்டன

மாவீரர் நாள் நினைவேந்தலை அனுமதித்தால் பெரும் ஆபத்து என்று பொலிஸார் சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணிகள் பொலிஸாரின் விண்ணப்பங்கள் அடிப்படையற்றவை என்றும், மன்று தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் சமர்ப்பணங்களை முன் வைத்தனர்.

இரு தரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த நீதிமன்றங்கள், குற்றவியல் நடவடிக்கை சட்டம் மற்றும் தனிமைப்படுத்தல் சட்டம் மீறப்பட்டால் நடவடிக்கை எடுக்க பொலிஸாருக்கு அதிகாரம் உள்ளது என்று சுட்டிக்காட்டி விண்ணப்பங்களை நிராகரித்தன.

## 'காலைக்கதிர்' .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இன்று விடிகாலையில் நல்லூர் கைலாசப்பிள்ளையார் கோவிலுக்கருகே உள்ள தமது இல்லத்தில் அமைதியாக நம்மை விட்டுப் பிரிந்தார்.

1942 இல் வட்டுக்கோட்டையில் பிறந்த அவர் தொழில்நுட்பக் கல்லூரியில் படிப்பை முடித்துக் கொண்டு 1960 களின் முற்பகுதியில் ஈழநாட்டில் பயிற்சி உதவி ஆசிரியராக இணைந்தார். 1960 களின் பிற்பகுதியில் கொழும்பில் 'தினபதி' 'சிந்தாமணி' பத்திரிகைகளில் உதவி ஆசிரியராக இணைந்த அவர் பின்னர் அப்பத்திரிகையின் செய்தி ஆசிரியரானார்.

1983 ஆடிக் கலவரத்தை அடுத்து தமது கொழும்பு வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு யாழ் திரும்பிய அவர் சொற்ப காலம் வீரகேசரி பத்திரிகையில் யாழ் அலுவலகத்தின் ஆசிரியபீடப்பொறுப்பாளராகக் கடமையாற்றினார்.

1985 இல் 'உதயன்', 'சஞ்சீவி' பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியராகவும் பிரதம ஆசிரியராகவும் பணியாற்றிய அவர் யுத்த காலத்தில் இலக்கு வைத்து நடாத்தப்பட்ட விபத்தில் படுகாயமடைந்தார். அதனால் சிகிச்சைக்காகவும், பாதுகாப்புக்காகவும் சுமார் மூன்று ஆண்டுகள் சுவிஸில் தங்கியிருக்க வேண்டியவரானார்.

கொடூர யுத்தத்துக்கு மத்தியிலும் நாடு திரும்பிய அவர் தொடர்ந்து 'உதயன்' 'சஞ்சீவி' பத்திரிகைகளை வழி நடத்தினார்.

2016 இறுதியில் 'காலைக்கதிர்' நாளிதழ் ஆரம்பிக்கப்பட்ட சமயம் அதன் ஸ்தாபக மற்றும் பிரதம ஆசிரியர் பதவிகளைப் பொறுப்பேற்றார்.

மூப்பு மற்றும் தளர்வு காரணமாக சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பணியிலிருந்து அவர் ஓய்வு பெற்றிருந்தார்.

தமிழ் இயக்கத் தலைவர்கள், தளபதிகள், கட்சித் தலைவர்கள் மத்தியில் பக்கம் சாரா நடுநிலை பத்திரிகையாளர் என்று பெரிதும் மதிக்கப்பட்டவர் அவர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை காலை பத்து மணிக்கு யாழ்ப்பாணம் நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காகக் கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

## 10 பேர் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹெரோயினுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கொழும்பு 14, ஜா - எல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 27 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கொழும்பு அலுபோமுல்ல, பாணந்துறை ஆகிய பொலிஸ் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின்போது 53 லீற்றர் மதுபானம், 2 ஆயிரத்து 124 லீற்றர் கோடா, இரு எரிவாயு அடுப்புகள், இரு எரிவாயு சிலிண்டர்கள், இரு செப்புத்தகடுகள் என்பவற்றுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அலுபோமுல்ல, பொல்கஸ்ஓவிட்ட ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 32, 62 வயதுகளையுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இரண்டு மதுபான சுற்றிவளைப்புகளில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளமையுடன் 308 லீற்றர் மதுபானம், ஒரு மோட்டார் சைக்கிள் என்பவற்றையும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கருவலகஸ்வெவ, எரபதுகஸ்வெவ பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் அனுமதிப்பத்திரமின்றி இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் துப்பாக்கியுடன் ஓட்டோவில் பயணித்த இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். புத்தளம் பிரதேசத்தைச் சேர்ந்த 27, 65 வயதுகளையுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குருநாகல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கேட்டுவான பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ஒரு கிராம் 486 மில்லிகிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மாளிய பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்- 076 443 8622
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com

மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

076 443 8619 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சரிந்தது ஊடக இமயம்

ஓர் ஊடக இமயம் சரிந்தது.

எமது நாளிதழின் ஸ்தாபக ஆசிரியரும், பிரதம ஆசிரியருமான ம.வ.கானமயில்நாதனின் மறைவு இலங்கைத் தமிழ் ஊடக உலகுக்கு ஒரு பேரிழப்பு.

கடைசிக்காலத்தில் வயோதிபம், மூப்பு, தளர்வு காரணமாக ஊடகப் பணியில் இருந்து அவர் சற்று ஒய்ந்திருந்தாராயினும் அதற்கு முன்னர் சுமார் ஐம்பது ஆண்டுகள் தமிழ் ஊடகப் பரப்பில் அவர் ஆற்றிய பணி இமயம் போல் உயர்ந்தது. நெருப்பாற்றை நீந்திக் கடந்த அருஞ் சாதனையிலும் மேலானது.

எழுத்தையும், பேனாவையும், காகிதத்தையும் வைத்துக் கொண்டு ஊடகச் சமராடிய உயர்ந்த போராளி அவர்.

இலங்கைத் தமிழ்ப் பத்திரிகை உலகின் ஜாம்பவான் எனப் போற்றப்படும் எஸ்.டி.சிவநாயகத்தின் பண்ணையில் பட்டை தீட்டப்பட்ட பெறுமதிமிக்க வைரம் அவர்.

எஸ்.டி.சிவநாயகம் தமிழ் ஊடகத்துறையில் குரு – சிஷ்ய முறையில் வளர்த்துவிட்ட உயரிய பாங்கை அத்துறையில் தொடர்ந்த மற்றொரு குரு அவர். ஊடகவியலாளர்கள் பலருக்கும் தமிழைத் தமிழாக எழுதக் கற்றுத் தந்த முன்னோடி.

இன்று உலகின் பல பாகங்களிலும் பரந்திருந்து, ஊடகத்துறையில் முத்திரை பதித்துவரும் பல ஊடகச் சிற்பிகளை உருவாக்கி விட்ட பெருமைக்குரியவர் கானமயில் நாதன்.

பத்திரிகை உலகில் அவரின் பெருமை, தகைமை, திறமை போன்றவை பரந்த பேசுபொருள்கள்.

போர்க்காலத்தில் பத்திரிகைப்பணி ஒரு ஜீவமரணப் போராட்டம். அதன் விளைவை நேரடியாக எதிர் கொண்டவர். இறப்பின் வாசலைத் தட்டி விட்டு மீண்டவர். யுத்த காலத்தின் பேரிழப்புக்களையும் போரிழப்புக்களையும் எதிர்கொண்டு சுமந்தபடி, சளைக்காது, களைக்காது தமிழுணர்வை – தமிழினத்தின் பக்க நியாயங்களை – எழுச்சியை – நேர்மைத் திறனுடன் வெளிப்படுத்திக் கொண்டிருந்தது அவரது பேனா.

யுத்தத்தின் கொடூரத்திற்கு மத்தியில் யாழ் குடாநாட்டில் இயங்கிய அனைத்துப் பத்திரிகைகளும் செயலிழந்தன. இருந்தபோதிலும் அவர் சுக்கான் பிடித்து, மரக்கலமாக யுத்த சமுத்திரத்துக்கு மத்தியில் செலுத்திய ஊடகம் மட்டுமே தனித்து நின்று, நிலைத்து நீடித்துத் தாக்குப் பிடித்தது.

உண்மை – நேர்மை – அஞ்சாமை – பக்கஞ்சாராமை என்ற தமது உயரிய கொள்கையை உறுதியோடு பற்றிப்பிடித்த படி அவர் காட்டிய நெறிப்படுத்தலே அதற்குப் பிரதான காரணம்.

தன்னை முன்நிறுத்தாமல் பின் நின்று இயக்கியவர். யாருடனும் தேவையற்றுப் பகைத்துக் கொள்ளார்.

தன்னுடன் பழகும் அனைவரையும் கள்ளமில்லாதவர்கள் எனக் கருதும் வஞ்சமில்லா நெஞ்சினர் அவர்.

தனக்காக என்று பணியாற்றுவதை விடுத்து, தன் நிறுவனத்துக்காக, தன் மக்களுக்காக, தன் இனத்துக்காக என்று உயிர்த்துடிப்புடன் பணியாற்றியவர்.

யுத்த காலத்தில் பலரும் இன உணர்வெழுச்சியைத் தட்டி எழுப்பி, வீறுகொண்டெழும் எழுத்து நடையை மட்டுமே விரும்பி நாடியபோது, அதையும் தாண்டி இனப்பொறுப்புணர்வுடன், சமத்துவப் பண்புடனும், கருத்துருவாக்கியாகவும் எழுத்து வழிகாட்டியாகவும் திராணியுடன் செயற்பட்ட சமூகச் சிற்பி அவர்.

யாரையும் மனதார வைதே அறியாதவர். தன் துணை ஆசிரியரிலிருந்து பிரதேச செய்தியாளர் வரை தனது ஊடகக் குடும்பத்தின் ஒவ்வொரு எழுத்துப் போராளி மீதும் என்றும் அதீத கவனமும், பற்றுப் பாசமும், வாஞ்சையும் கவனிப்பும் கொண்டவர்.

ஊடகத்துறையில் கால் வாரல்கள், குழி பறிப்புக்கள், குசும்பு பண்ணுதல், தட்டி விழுத்துதல், மோசமாக விமர்சித்தல் என்ற பிற்போக்குத்தனம் எதனுடனும் என்றுமே சம்பந்தப்படாத – கள்ள கபடமற்ற – மாண்பினர் அவர்.

செய்தியைப் பொறுத்தவரை உள்ளதை உள்ளபடி அறிக்கையிடல் என்ற உயரிய தத்துவ நெறியைப் பின்பற்றியமையோடு அதன் வழி உயர்வாகச் செயற்பட தமக்கு அடுத்த தலைமுறை ஊடகவியலாளர்களுக்கும் நெறிகாட்டியவர்.

அவர் மறைவு தமிழ் ஊடகத்துறைக்குப் பேரிழப்பு.

# தீர்வு கிடைக்காது விட்டால் வேலைநிறுத்தப் போராட்டம்

## அரச அதிகாரிகள் எச்சரிக்கை

அரசால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2022 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டத்தில் அரச அதிகாரிகளைப் புறக்கணித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடு தழுவிய ரீதியில் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக இலங்கை அரச அதிகாரிகளின் தொழிற்சங்க ஒன்றியங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்துள்ள அந்த அமைப்பின் தேசிய அமைப்பாளர் பிரதீப் பஸ்நாயக்க –

அரசஅதிகாரிகளின்பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்குமாறு கடந்த 13 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடம் முன்வைக்கப்பட்ட எழுத்து மூல கோரிக்கைக்கு இதுவரையில் எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.

அதன் காரணமாக எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் எங்களின் கோரிக்கைகளுக்குத் தீர்வு கிடைக்காவிட்டால் 29 ஆம் திகதி நாடு தழுவிய ரீதியில் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

அதற்கமைய, கிராம அதிகாரிகள், ஒருங்கிணைப்பு அதிகாரிகள், முகாமையாளர் சேவை அதிகாரிகள், விவசாய பரிசோதனை உதவி அதிகாரிகள் மற்றும் காரியாலய சேவைஅதிகாரிகள்இந்தவேலைநிறுத்தத்தில் கலந்துகொள்வார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

# பொது இடங்களுக்கு தடுப்பூசி அட்டை கட்டாயம் நாடாளுமன்றின் அனுமதியைப் பெற நடவடிக்கை

## சுகாதார அமைச்சர் தகவல்



பொது இடங்களுக்குச் செல்லும் போது தடுப்பூசி அட்டைகளை கட்டாயமாக்குவதற்கு நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான சட்ட ஆவணங்கள் தற்போது சட்ட மா அதிபர் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

பொது இடங்களுக்குச் செல்லும்போது தடுப்பூசி அட்டைகளை கட்டாயமாக்கும் யோசனைக்கு சட்ட மா அதிபர் திணைக்களம் அண்மையில் அனுமதி வழங்கியது.

இது தொடர்பான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவித்த அமைச்சர் ரம்புக்வெல, வரவு – செலவுத் திட்ட விவாதங்கள் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றுவருவதால்அதற்கானநடவடிக்கைகள் தாமதமாகியுள்ளன எனத் தெரிவித்தார்.

# புதிய டெல்டா உப வைரஸ் திரிவு மாணவர்களுக்கு பரவும் அபாயம்!

## சன்ன ஜயசுமன எச்சரிக்கை



பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் புதிய டெல்டா உப வைரஸ் திரிவு பரவும் அபாயம் அதிகமாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, புதிய டெல்டா திரிவின் உப பரம்பரை பாடசாலை மாணவர்கள் மத்தியில் பரவும் அபாயம் காணப்படுவதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# நீர்கொழும்பு பொலிஸ் பிரிவில் விபச்சார விடுதி சுற்றிவளைப்பு

கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குடாபாடுவ பிரதேசத்தில் பாலியல் தொழில் விடுதியொன்று நேற்றிரவு சுற்றிவளைக்கப்பட்டுள்ளதுடன்மூவர்கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

விபச்சார விடுதியை நிர்வகித்து வந்த 40 வயது நபரும், விபச்சார விடுதியை நடத்திச் செல்வதற்கு உடந்தையாக இருந்த 37, 52 வயதுகளையுடைய இரு பெண்களுமே இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மூவரும் நீர்கொழும்பு, கம்பஹா, மொரட்டுவை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின்போதே மூவரும் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தனியார் பஸ் நடத்துநர் மீது யாழில் தாக்குதல்

யாழ் – காரைநகர் பயணிகள் சேவையில் ஈடுபட்ட தனியார் பஸ் ஒன்று சங்கானையில் வழிமறிக்கப்பட்டு நடத்துநர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நேற்று (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 3.50 மணியளவில் இடம்பெற்ற தாக்குதலில் நடத்துநர் உள் காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். சாரதி ஒருவரின் ஒழுங்கீனம் காரணமாக அவரை மேற்படி தனியார் பஸ் சங்கம் சேவையில் இருந்து இடைநிறுத்தியது எனவும் அதன் பின்னணியிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது. இது தொடர்பாக வட்டுக்கோட்டை மற்றும் மானிப்பாய் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# ஜெருசலேமில் துப்பாக்கிச் சூடு ஒருவர் சாவு; 3 பேர் காயம்



ஜெருசலேம் பழைய நகரத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டு தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளதோடு மேலும் மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன தரப்பினர் இடையே அடிக்கடி மோதல் நடக்கும் கிழக்கு ஜெருசலேம் எல்லைச் சுவர் ஒன்றுக்கான நுழைவாயிலில் இந்த தாக்குதல் நடந்தது.

இப்பகுதியில் தான் அல்-அக்சா மசூதி அமைந்துள்ளது. இது இஸ்லாமியர்களின் புனித தலங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. இதே வளாகத்தில் யூதர்களின் புனித தலமான டெம்பிள் மவுண்ட் எனும் யூத வழிபாட்டுத் தலமும் அமைந்துள்ளது.

பாதி அபு ஷ்காய்தாம் என்று இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன ஊடகங்களால் அடையாளப்படுத்தப்படும் இந்த நபர் ஹமாஸ் அமைப்பைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் நடத்திய தாக்குதலில் காயமடைந்த ஒருவர் மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார். இன்னொருவர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார் என்றும் இஸ்ரேல் பாதுகாப்பு அதிகாரிகள் இருவருக்கு காயம் ஏற்பட்டுள்ளது என்றும் இஸ்ரேல் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இஸ்ரேலின் உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் ஒமர் பர்-லேவ் கூறுகையில், 'இது முன்கூட்டியே திட்டமிடப்பட்ட தாக்குதல். இது 32 அல்லது 36 நொடிகள் மட்டுமே நடந்தது. தம்மை ஒரு பழமைவாத யூதர் போல காட்டிக் கொண்ட அந்த நபர் துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்டார்' என கூறினார்.

# லிதுவேனியாவுக்கான தூதரக அந்தஸ்தை குறைத்தது சீனா




லிதுவேனியாவில் தாய்வான் பிரதிநிதித்துவ அலுவலகம் அமைக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகை யில், அந்த நாட்டுக்கான தூதரக அந்தஸ்தை சீனா குறைத்துள்ளது.

இதன்படி, லிதுவேனியாவுக்கான தூதரக அந்தஸ்தை இடைக்கால தூதரகம் என்ற நிலைக்கு சீனா குறைத்துள்ளது.

ஏற்கெனவே, லிதுவேனியாவுக்கான தங்கள் நாட்டுத் தூதரை திரும்ப அழைத்ததுடன் அந்த நாட்டின் தூதரை சீனா வெளியேற்றியுள்ளது. இந்த விவகாரம், இருநாட்டு உறவில் மேலும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

முன்னதாக, தாய்வான் விவகாரத்தில் லிதுவேனியா என்ன விதைக்கிறதோ அதனையே அறுவடை செய்யும் என சீனா எச்சரித்திருந்தது.

உலகின் எல்லா முக்கிய நாடுகளுடனும் வர்த்தக அலுவலகங்களையும் அதிகாரப்பூர்வமற்ற தூதரகங்களையும் தாய்வான் கொண்டுள்ளது. தாய்வானுடன் 15 நாடுகள் மட்டுமே அதிகாரப்பூர்வமான தூதரக உறவைக் கொண்டுள்ளன.

முதலாம் உலகப் போருக்குப் பின் ஜேர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த லிதுவேனியா, கடந்த 1918 ஆம் ஆண்டில் சுதந்திரப் பிரகடனம் செய்தது. தாய்வானும் சீனாவின்கிங்அரசவம்சஆட்சியிலிருந்து அதே ஆண்டில் தன்னை விடுவித்துக் கொண்டது.

அதையடுத்து, இரு நாடுகளும் கடந்த 1921ஆம் ஆண்டு தூதரக உறவை ஏற்படுத்திக்கொண்டன. லிதுவேனியாவை சோவியத் ஒன்றியம் கடந்த 1940 ஆம் ஆண்டில் இணைத்துக் கொள்ளும் வரை இந்த உறவு தொடர்ந்தது.

பின்னர் சோவியத் ஒன்றியம் சிதறுண்டு, லிதுவேனியா மீண்டும் தனி நாடான பிறகு தாய்வானுக்கு பதில் சீனாவுடன் தூதரக உறவை ஏற்படுத்திக்கொள்ள அந்த நாடு முடிவு செய்தது.

இந்தச் சூழலில், சீனாவால் லிதுவேனியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதாக கடந்த 2019ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தேசிய பாதுகாப்பு அறிக்கையில் கூறப்பட்டது. அதற்குப் பிறகு, லிதுவேனியாவுக்கும் தாய்வானுக்கும் இடையே நெருக்கம் அதிகமானது.

இரு நாடுகளுக்கும் இடையே தூதரக அலுவலகத்துக்கு இணையான பிரதிநிதித்துவ அலுவலகத்தை அமைத்துக்கொள்ள லிதுவேனிய நாடாளுமன்றம் கடந்த ஒக்ரோபர் மாதம் ஒப்புதல் அளித்தது.

இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஏற்கெனவே லிதுவேனியாவுக்கான தங்கள் நாட்டுத் தூதரை சீனா திரும்ப அழைத்தது. மேலும், தங்கள் நாட்டிலிருந்து லிதுவேனியத் தூதரையும் வெளியேற்றியது. இந்தச் சூழலில், வில்னியஸ் நகரில் தாய்வான் பிரதிநிதித்துவ அலுவலகம் கடந்த வியாழக்கிழமை திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# லிபியாவில் படகு விபத்து; 75 புலம்பெயர்ந்தோர் உயிரிழப்பு



இந்த வார தொடக்கத்தில் லிபியாவிற்கு வடக்கே மத்தியதரைக் கடலில் படகு மூலம் இத்தாலியை அடைய முயன்ற 75 புலம்பெயர்ந்தோர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என ஐக்கிய நாடுகளின் குடியேற்ற முகவரகம் தெரிவித்துள்ளது.

உயிர் பிழைத்த 15பேர், மீனவர்களால் மீட்கப்பட்டு வடமேற்கு லிபியாவில் உள்ள ஜுவாரா துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்டனர் என குடியேற்றத்திற்கான சர்வதேச அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இத்தாலிய கடலோர காவல்படை மத்தியதரைக் கடலில் சிரமப்பட்ட படகுகளில் இருந்து டஸின் கணக்கான சிறார்கள் உட்பட 420க்கும் மேற்பட்ட புலம்பெயர்ந்தோரை மீட்டது.

சிசிலிக்கு தெற்கே உள்ள சிறிய இத்தாலிய தீவான லம்பேடுசாவுக்கு 70பேர் தங்கள் மோட்டார் படகுகள் மூலம் பாதுகாப்பாக அழைத்து வரப்பட்டனர் எனக் கடலோர காவல்படை அறிக்கை தெரிவித்துள்ளது.




# சோமாலியாவில் தொடர்கிறது உணவுப் பற்றாக்குறை

சோமாலியாவில் தொடர்ந்து நான்காவது பருவமாக, இந்த ஆண்டும் போதிய அளவுக்கு மழை பொழிவு இல்லை.

எனவே நீர் நிலைகளில் அதிவேகமாக நீர் குறைந்து வறட்சி அதிகரித்து வருகிறது. சோமாலியாவில் 20 லட்சத்துக்கும் மேற்பட்டோர் போதிய உணவு மற்றும் குடிநீரின்றி தவிக்கின்றனர் என ஐக்கிய நாடுகள் சபை கூறியுள்ளது. கிட்டத்தட்ட ஒரு லட்சம் பேர் உணவு, குடிநீர், தங்கள் கால் நடைகளுக்கான உணவு ஆகியவை இல்லாமல் தங்கள் வீட்டை விட்டு வெளியேறி உள்ளனர். அடுத்த ஆண்டு, சுமார் 80 லட்சம் பேர் உணவுப் பற்றாக்குறை பிரச்சினையை எதிர் கொள்ளலாம் என ஐக்கிய நாடுகள் சபை எதிர் பார்க்கிறது. சோமாலியாவில் கடந்த மூன்று தசாப்தங்களாக போர்கள் நடந்து வருகின்றன. அது போக கடுமையான வறட்சி, வெள்ளம், பூச்சிகள் பயிரை அழிப்பது போன்ற பிரச்சினைகளையும் அந்நாடு எதிர்கொண்டு வருகிறது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# சென்னையில் வெள்ளச் சேதங்களை பார்வையிடுவதற்கு இந்திய மத்திய அரசின் குழு தமிழகத்துக்கு விஜயம்



தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து, கடந்த 10 நாள்களாக பெய்த கனமழையால் பல மாவட்டங்களில் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான ஹெக்டேயரில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் நீரில் மூழ்கி சேதம் அடைந்துள்ளன. ஏராளமான பயிர்கள் அழுகிவிட்டன. வெள்ளம் கரைபுரண்டு ஓடியதால் வயல்வெளிகளில் அள்ளூண்டுவந்த மணல் குவிந்து காணப்படுகிறது. சென்னை மற்றும் புறநகரில் ஏற்பட்ட வெள்ளத்தால் வீடுகளுக்குள் மழை நீர் புகுந்து அதிக பொருள் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் தமிழக அரசு முழு வீச்சில் ஈடுபட்டு வருகிறது. முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டு தேவையான உத்தரவுகளைப் பிறப்பித்துவருகிறார். அவரது உத்தரவின் பேரில் அமைச்சர்கள் குழுவினர் டெல்டா மாவட்டங்களில் ஆய்வு செய்து பயிர்ச் சேதம் குறித்த அறிக்கையை அளித்துள்ளனர். அதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட கோரிக்கை மனுவை டெல்லியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவிடம் டி.ஆர்.பாலு எம்.பி. வழங்கினார். அதில் வெள்ள நிவாரண பணிகளுக்காக .2,629 கோடி ரூபாவை வழங்க வேண்டும் என்று மத்திய அரசிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. முதல் கட்டமாக 550 கோடியை உடனடியாக வழங்க வேண்டும் என்றும் அதில் கோரப்பட்டுள்ளது. தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று வெள்ளச் சேதங்களைப் பார்வையிட ஏழு பேர் கொண்ட குழுவை இந்திய மத்திய அரசு அமைத்தது. இந்த மத்திய குழுவினர் நேற்று மதியம் சென்னை வந்து தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலாளர் இறையன்பு, பேரிடர் மேலாண்மைத் துறைச் செயலாளர் பணீந்திர ரெட்டி உள்ளிட்ட உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்கள். அப்போது தமிழகத்தில் ஏற்பட்ட வெள்ளச் சேத விவரங்கள் அவர்களுக்கு விரிவாக வழங்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து மத்திய குழுவினர் இரு பிரிவுகளாகப் பிரிந்து சென்று இன்றும் நாளையும் வெள்ளச் சேதப் பகுதிகளை நேரில் பார்வையிடுகின்றனர். உள்துறை அமைச்சக இணைச் செயலாளர் ராஜீவ் சர்மா தலைமையிலான முதல் குழுவில் வேளாண்மை, கூட்டுறவு, விவசாயிகள் நலன் துறை இயக்குநர் விஜய்ராஜ்மோகன், மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சக மண்டல அதிகாரி ராணஞ்சாய்சிங், மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சக சார்பு செயலாளர் எம்.வி.என். வரபிரசாத் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இந்தக் குழுவினர் இன்று காலை சென்னையில் ஏற்பட்ட வெள்ள சேதங்களை பார்வையிட்டனர். இந்தக் குழுவினருடன் மாநகராட்சி ஆணையர் ககன்தீப்சிங் பேடி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகப் பொது மேலாளர் சுரேஷ் உள்ளிட்ட அதிகாரிகள் உடன் சென்று விளக்கமளித்துள்ளனர்



ஆறு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து

# பிரதமருக்கு விவசாயிகள் அமைப்பு கடிதம்

மூன்று சர்ச்சைக்குரிய புதிய வேளாண் சட்டங்களையும் மீளப் பெறுவதாக அறிவிக்கப்பட்ட நிலையில் 6 முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து இந்தியப் பிரதமர் மோடிக்கு சம்யுக்தா கிசான் மோர்ச்சா என்ற விவசாயிகளின் கூட்டமைப்பு கடிதம் அனுப்பியுள்ளது.

இந்தியப் பிரதமர் மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில், தங்களது 6 கோரிக்கைகள் தொடர்பான பேச்சினை மத்திய அரசு உடனே தொடங்க வேண்டும் என சம்யுக்தா கிசான் மோர்ச்சா வலியுறுத்தியுள்ளது. இதன்படி, அனைத்து விவசாயிகளுக்கும் விளைபயிர்களுக்கு சாகுபடி செலவுக்கு ஏற்றவாறு குறைந்த பட்ச ஆதரவு விலை வழங்கப்படுவதை உறுதிசெய்ய சட்டம் இயற்ற வேண்டும் என அந்த அமைப்பு கோரிக்கை வைத்துள்ளது. போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் மீதான வழக்குகளை மீளப் பெற வேண்டும் எனவும், போராட்டத்தின்போது இறந்த விவசாயிகளுக்கு நினைவு மண்டபம் அமைக்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

மின்சாரச் சட்டத்திருத்த பிரேரணையைத் திரும்பப் பெறவேண்டும், டெல்லி மற்றும் அதன் புறநகரப் பகுதிகளில் காற்றுத்தர மேலாண்மைக்கான சட்டத்தில் விவசாயிகளுக்கு எதிரான அம்சங்களை நீக்க வேண்டும் போன்றனவும் இந்தியப் பிரதமருக்கு எழுதப்பட்டுள்ள கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளன.

இவை தவிர, லக்கிம்பூரில் விவசாயிகள் மீது வாகனத்தை மோதிய சம்பவத்தில் மத்திய இணையமைச்சர் அஜய் மிஸ்ராவை பதவியிலிருந்து நீக்கவேண்டும்எனவும்அவரைக் கைதுசெய்யவேண்டும் என்றும் சம்யுக்தா கிசான் மோர்ச்சா அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

# காவல்துறையை மேம்படுத்த தொழிநுட்பம் அவசியம் 56 ஆவது டி.ஜி.பி.க்கள் மாநாட்டில் பிரதமர் கருத்து



நாடு முழுவதும் அடிப்படைக் காவலை மேம்படுத்த அதிக அதிகாரமிக்ககாவல்தொழிநுட்பத்தை அமைக்க வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடி அறிவுறுத்தியுள்ளார்.

உத்தரப் பிரதேச மாநிலம் லக்னோவில் 56 ஆவது பொலிஸ் டி.ஜி.பிக்கள் மாநாடு நடை பெற்றது.

இதில் பங்கேற்று பேசிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அடிப்படைக் காவலை மேம்படுத்த, எதிர்கால தொழிநுட்பங்களை பயன்படுத்துவது அவசியம் என்று தெரிவித்தார். மாநிலங்களுக்கு இடையிலான தொழிநுட்பங்களை மேம்படுத்துவதன் மூலம் நாடு முழுவதும் உள்ள பொலிஸ் படைகள் பயன்பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொதுமக்களை அணுகும் பொலிஸாரின் போக்கில் நேர் சிந்தனைக்குரிய மாற்றங்கள் தெரிவது பாராட்டுக்குரியது என்றும் இந்தியப் பிரதமர் தனது உரையில் தெரிவித்துள்ளார்.

# வன்கொடுமைகளில் டி.என்.ஏ. சோதனையை மட்டுமே ஆதாரமாக குற்றவாளிகள் கூற முடியாதென உச்சநீதிமன்றம் வலியுறுத்தியது

குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமைகளில் டி.என்.ஏ. சோதனையை மட்டுமே ஆதாரமாகக் கூறி குற்றவாளிகள் தப்ப முடியாது என இந்திய உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. பத்து வயதுச் சிறுமி ஒருவரை வன்கொடுமை செய்த வழக்கில் குற்றவாளிக்கு விதிக்கப்பட்ட 10 ஆண்டுகள் தண்டனை இந்திய உச்ச நீதிமன்றத்தினால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

தனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை ரத்துச் செய்யக்கோரிய குற்றவாளியின் மனு மீதுஉச்சநீதிமன்றம்கருத்துதெரிவித்துள்ளது. குற்றவாளி முருகனுக்கு புதுக்கோட்டை மகிளா நீதிமன்றத்தில் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அதனை எதிர்த்து அந்த நபர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தண்டனையை ரத்துச் செய்யக்கோரி மனுத்தாக்கல் செய்திருந்தார். இருந்தும் சென்னை உயர்நீதிமன்றம் தண்டனையை உறுதி செய்தது. இதையடுத்து குறித்த நபர் உச்சநீதிமன்றத்தை நாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

புதுக்கோட்டை – விராலிமலையில் கடந்த 2010 இல் பத்து வயதுச் சிறுமியை வன்புணர்வு செய்த அந்த நபருக்கு தற்போது தண்டனை உறுதியாகியுள்ளது.



# இந்தோனேஷியா தூதரகத்தின் ஏற்பாட்டில் கிண்ணியாவில் கலாசார பரிமாற்ற நிகழ்வு

இந்தோனேஷியா தூதரகத்தின் ஏற்பாட்டில் கலாச்சார பரிமாற்ற நிகழ்வு ஒன்று திருகோண மலை மாவட்டம், கிண்ணியாவில் நடைபெற்றது.

இந்தோனேசியாவின் புகழ்பெற்ற நடனம் மற்றும் பாரம்பரிய இசைக் கருவியான மூங்கிலால் ஆன இசைக்கருவியை இசைத்தல் போன்ற நிகழ்வுடன் இலங்கை திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தில் பாரம்பரிய இசைக் கருவிகளைக் கொண்டு பாடல்கள், மற்றும் தகரா பாவா பாடல்கள் சீனடி விளையாட்டு என்பன வற்றை இரு நாடுகளுக்கான கலாசார நிகழ்வாக பகிர்ந்து கொண்டன.

ஜோர்தான் நாட்டுக்கான முன்னாள் தூதுவர் ஏ.எல்.எம்.லாபிர் தலைமையில் கிண்ணியாவின் கேட்போர் கூடத்தில் நேற்று இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் யுனெஸ்கோ நிறுவனத்தினால் பாரம்பரிய இசை என்ற அங்கீகாரத்தை பெற்ற மூங்கிலால் ஆன இசைக்கருவியை இசைத்து காட்டினர்.

மேலும் இந்தோனேஷியா நாட்டின் பிரபல நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் இந்தோனேஷிய நாட்டின் பிரதித் தூதுவரும் கலாசார நிகழ்வின் பிரதம உத்தியோகத்தருமான ஹிரோ பிரே இட் நோ பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார் இந்த நிகழ்வில் நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.



# புத்து கஜ முத்துக்களுடன் அம்பாறையில் மூவர் கைது

அம்பாறை வரிப்பத்தான்சேனை பகுதியில் சட்டவிரோதமான முறையில் 10 கஜ முத்துக்களை விற்பனை செய்ய முயன்ற மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்முனை பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு நேற்று கிடைத்த இரகசிய தகவலையடுத்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட கஜ முத்துக்களை 1 கோடி ரூபாவிற்கு விற்பனை செய்ய சந்தேகநபர்கள் முயற்சித்துள்ளனர் என விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.




# மட்டக்களப்பு மாணவர்களுக்கான தனியான சைக்கிள் ஓடுபாதை வீதி

மட்டக்களப்பு நகரில் பாடசாலை நாட்களில் பயணம் செய்ய சைக்கிள் ஓடுபாதை அமைத்து தரும்படி சிறுவர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த ஓடு பாதையினை முதல் முறையாக மாநகர பகுதியில் அமைத்துத்தரும் படி கேட்டு மாணவர்கள் சைக்கிளில் பாதுகாப்பான பயணம் ஒன்றை மேற் கொண்டு குறித்த வேண்டுகோளை முன்வைத்துள் ளனர்.

கோரிக்கையினை முன்வைத்த சிறார்களுக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம், போக்குவரத்து திணைக்களம் ஆகியோருடன் கலந்தாலோசித்து அதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்து தருகிறேன் என மாநகர முதல்வர் தியாகராசா சரவணபவன் மாணவர்களிடம் உறுதியளித்துள்ளார்.

# மட்டக்களப்பு பாடசாலைகளிலும் ஆரம்பம் அனைத்து தரங்களுக்குமான கற்றல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் 6 முதல் 9 வரையான தரங்களுக்கான கற்றல் செயற்பாடுகள் இன்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

அண்மையில், தரம் ஒன்று முதல் 5 வரையிலான வகுப்புகளும் 10 முதல் உயர்தர வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில், சகல தரங்களுக்குமான கற்றல் செயற்பாடுகள் இன்று ஆரம்பிக்கப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தில் 90 சதவீதமான வர்கள் பாடசாலைகளுக்கு சமுகமளித்திருந்ததாக பாடசாலை அதிபர்கள் தெரிவித்தனர்.

கொரோனாத் தொற்று நிலையை அடுத்து, பாடசாலைகள் நீண்டகாலம் மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# திருகோணமலையில் கைக்குண்டு ஒன்று மீட்பு

திருகோணமலை தனியார் காணி ஒன்றில் கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனியாருக்குச் சொந்தமான காணியை துப்புரவு செய்து கொண்டிருக்கும் போது இந்த கைக்குண்டை கண்டனர் எனவும் அதனை அடுத்து பொலிஸ் நிலையத்திற்கு தெரியப்படுத்தினர் எனவும் தெரியவருகின்றது.

இதனையடுத்து நேற்று குறித்த பகுதிக்குச் சென்ற பொலிஸாரால் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

குறித்த கைக்குண்டை வெடிக்க வைக்க கந்தளாய் நீதிமன்றத்தின் அனுமதியை பெற உள்ளோம் எனவும் தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




# சட்டவிரோதமாக மணல் அகழ்வு வெருகல் இளைஞர்கள் கவனவீர்ப்பு

திருகோணமலை வெருகல் பிரதேசத்தில் சட்ட விரோதமாக முன்னெடுக்கப்படும் மணல் அகழ்வினைக் கண்டித்து கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று இன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வெருகல் பிரதேச இளைஞர்கள் மற்றும் திருகோணமலை மாவட்ட சமூக ஆர்வலர்கள் இணைந்து வெருகல் பிரதேச செயலகத்தின் முன்னால் இந்த கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை இன்றைய தினம் முன்னெடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் சட்டவிரோத மணல் அகழ்வினை தடுத்து நிறுத்துமாறு கோரிய மகஜர் ஒன்றினையும் பிரதேச செயலாளரிடம் கையளித்தனர்.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு





# மேற்கிந்திய வீரர் சொலொசனோ ஆரோக்கியமாக இருக்கிறாராம்

இலங்கை மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில் பந்து ஹெல்மெட்டைத் தாக்கியதால் உபாதைக்கு ஆளாகிய மேற்கிந்தியத் தீவுகள் அணி அறிமுக வீரர் ஜெரேமி சொலொசனோ ஆரோக்கியமான நிலையில் உள்ளார் என மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை உறுதி செய்திருக்கின்றது.

ஐ.சி.சியின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பிற்காக இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் விளையாடுகின்ற இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி நேற்று காலி சர்வதேச மைதானத்தில் ஆரம்பமாகியது. இப்போட்டியின் 24ஆவது ஓவரின்போது ரொஸ்டன் சேஸின் பந்துவீச்சில் இலங்கை அணித்தலைவரான திமுத் கருணாரட்ன வலிமையாக அடித்த பந்து களத்தடுப்பில் ஈடுபட்ட ஜெரேமி சொலொசனோவின் தலைக்கவசத்தினைத் தாக்கியதோடு பந்து பட்ட பின்னர் சொலொசனோவும் மைதானத்தில் சுருண்டு விழுந்திருந்தார்.

மைதானத்தில் இருந்த மருத்துவ உதவியாளர்கள் மூலம் அவர் பரீட்சிக்கப்பட்டதோடு, அம்புலன்ஸ் வண்டி ஒன்றின் துணையுடன் உடனடியாக மருத்துவமனைக்கும் கொண்டுசெல்லப்பட்டிருந்தார். பின்னர் மேலதிக பரிசோதனைகளுக்காக கொழும்புக்கு அவர் அனுப்பிவைக்கப்பட்டிருந்தார் என செய்திகள் வெளியாகியிருந்தன. தற்போது அவர் சிக்கல்கள் ஏதுமின்றி ஆரோக்கிய நிலையில் இருந்தாலும், முன்னெச்சரிக்கைநடவடிக்கையாகசொலொசனோவை தொடர்ந்தும் மருத்துவக் கண்காணிப்பில் வைத்திருக்கிறோம் என மேற்கிந்தியக் கிரிக்கெட் சபை குறிப்பிட்டிருக்கின்றது.

சொலொசனோவுக்குப் பிரதியீட்டு வீரராக சாய் ஹோப் மேற்கிந்திய அணியில் இணைக்கப்பட்டு விளையாடிவருகிறார்.

## அபுதாபி ரி-10 லீக் தொடரில் மேலும் 2 இலங்கை வீரர்கள்?




ஐக்கிய அரபு இராச்சியத்தின் அபுதாபியில் நடைபெற்றுவரும் ரி-10 லீக் தொடரில் இலங்கை அணியின் வேகப்பந்துவீச்சாளர் நுவான் பிரதீப் மற்றும் இளம் சுழல் பந்துவீச்சாளர் கெவின் கொத்திகொட ஆகியோரும் இணைக்கப்பட்டுள்ளமை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது அபுதாபியில் தங்கியிருக்கும் கெவின் கொத்திகொட, தசுன் ஷானக தலைமையிலான சென்னை பிரேவ்ஸ் அணிக்காக விளையாடவுள்ளார். இவர் உடனடியாக அணியுடன் இணைந்துகொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. நுவான் பிரதீப் நாளை 23 ஆம் திகதி இலங்கையிலிருந்து புறப்பட்டுச்சென்று தொடரில் பங்கேற்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அபுதாபி ரி-10தொடரில், இலங்கை அணியைச் சேர்ந்த தனஞ்ய லக்ஷான், தசுன் ஷானக, பானுக ராஜபக்ஷ, அஞ்செலோ பெரேரா ஆகியோர் சென்னை பிரேவ்ஸ் அணிக்காகவும், டெக்கான் கிளேடியட்டர் அணிக்காக வனிந்து ஹஸரங்க, பங்ளா டைகர்ஸ் அணிக்காக இசுரு உதான, நொதேர்ன் வொரியர்ஸ் அணிக்காக உபுல் தரங்க மற்றும் பினுர பெர்னாண்டோ ஆகியோர் ஏற்கனவே விளையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியில் மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதி

ஐ.சி.சி. மகளிர் ஒருநாள் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான தகுதிகாண் சுற்றில் விளையாடுவதற்காக சிம்பாப்வேக்குச் சென்றுள்ள இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் மூன்று வீராங்கனைகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. குறித்த வீராங்கனைகள் மூவரையும் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் சபை(ஐ.சி.சி.) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அணியில் உள்ள ஏனைய வீராங்கனைகளுக்கும் பயிற்சியாளர் குழுவினருக்கும் மேற்கொள்ப்பட்ட பரிசோதனையில் எவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று இல்லை என்பது தெரியவந்துள்ளது. ஆயினும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவர்கள் அனைவரும் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

2022 ஆம் ஆண்டுக்கான மகளிர் ஒருநாள் கிரிக்கெட் உலகக் கிண்ணத் தகுதிகாண் சுற்றுப்போட்டியில் ஏ குழுவில் இடம்பெற்றுள்ள இலங்கை அணி தனது முதல் போட்டியில் நெதர்லாந்தை நாளைய தினம் எதிர்த்தாடவுள்ளது.

போட்டிக்கு முன்னதாக இலங்கை மகளிர் அணியில் இடம்பெற்றுள்ள அனைத்து வீராங்கனைகளும் மீண்டும் கொரோனாத் தொற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் என ஐ.சி.சி. வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தகுதிகாண் சுற்றுப்போட்டிகள் அனைத்தும் திட்டமிட்டபடி நடைபெறும் எனவும் ஐ.சி.சி. தெரிவித்துள்ளது.



# சுமந்திரனின் சட்டப்புலமை தமிழர்களுக்கு எதையுமே பெற்றுக்கொடுக்கவில்லையாம்!

## அனந்தி கண்டுபிடிப்பு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் சட்டப்புலமை தமிழ் மக்களுக்கு எதையும் பெற்றுக்கொடுக்கவில்லை எனவும் அறைகளுக்குள் விளக்கேற்றி படங்களை பிரசுரிப்பதை விடுத்து பொதுவெளிக்கு வர வேண்டும் எனவும் முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி ஊடக மையத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அவர் ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பிலேயே இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர்–

'நவம்பர் மாதம் 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை மாவீரர் தினம். அதேபோல மே 18ஆம் திகதி பொதுமக்களுக்கான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல். தற்போது ஆட்சிக்கு வந்திருப்பவர்கள் இந்த இரண்டு நிகழ்வுகளையும் தடுத்து வந்திருக்கின்ற நிலையில், கடந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தலிற்கு முதல் நாள் சடுதியாக ஆடைத்தொழிற்சாலையில் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாக செய்தியைக் கொண்டுவந்தார்கள்.

முல்லைத்தீவு வைத்தியசாலையில் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொண்டால் ஒரு கிழமை, மூன்றுநாள், ஐந்து நாள் என்று சென்ற நிலையில் உடினடியாக அதன் முடிவுகளை கூறி கொத்தணி உருவாகுவது போல் மாயையைக் காட்டினார்கள்.

எங்களுடைய நிகழ்வுகள், போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றபொழுது கொரோனாவை சாட்டாக வைத்துக் கொண்டு அவர்கள் பழிவாங்குகின்ற அல்லது குரள் வளையை நெரிக்கின்ற செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றார்கள்.

கடந்த மாவீரர் தினத்திலும் இவ்வாறு நீதிமன்றத் தடைகளை எடுக்கப்பட்டிருந்தது. இம்முறையும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஓடியோடி இந்தத் தடைகளை நீதிமன்றங்களில் பெற்றுக்கொள்ள முயற்சித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த விடயத்தை சவாலுக்கு உட்படுத்தக்கூடிய சட்டத்தரணிகள் குழாம் இருக்க வேண்டும். அந்த சட்டத்தரணிகள் குழாம் தமிழ்த் தேசியம் சார்ந்து விவாதிக்க வேண்டியவேளை வந்திருக்கின்றது. மனமுவந்து சட்டத்தரணிகள் குழாம் இதற்கு தயாராக வேண்டும்.

உண்மையில் சுமந்திரனுடைய சட்டம், சட்ட புலமை தமிழ் மக்களுக்குப் பயன்பட்டதாக இல்லை. வெறுமனே வீட்டுக்குள் கொளுத்துவதென்பது பொருத்தமானதல்ல. நாங்கள் சொல்லாவிடினும் வீடுகளில் மாவீரர்களை நினைந்து அவர்கள் விளக்கேற்றத்தான் போகின்றார்கள். ஆனால், உலகிற்கு சொல்வதற்கு ஒரு பொது வெளியில் வரவேண்டும். சகல கட்சிகளிலும் சட்டத்தரணிகள் நிறையப்பேர் இருக்கின்றார்கள். இந்த முறையாவது அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தங்களுக்குள் பேசி இந்த விடயத்தை விவாதத்துக்குக் கொண்டு வர வேண்டும் என்பது இப்பொழுது தேவையாக உள்ளது. – என அவர் மேலும் தெரிவித்தார்.

# நாட்டில் அதிகளவானோர் மது அருந்துகின்றார்கள்

## சுற்றாடல்துறை அமைச்சர் தகவல்



கடந்த 2018 ஆம் ஆண்டு 10 கோடிக்கு அதிகமான 180 மில்லிலீற்றர் (கால் போத்தல்) வெற்று சாராய போத்தல்கள் சுற்றாடலுக்குள் சேர்ந்துள்ளன என ஆய்வு அறிக்கை ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

2018 ஆம் ஆண்டில் 10 கோடியே 55 லட்சத்து 32 ஆயிரத்து 169 கால் போத்தல் அதாவது 180 மில்லி லீற்றர் சாராயப் போத்தல்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளமையுடன் அந்த போத்தல்கள் அனைத்து சுற்றாடலுக்குள் சேர்ந்துள்ளன என சுற்றாடல் துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

2018 ஆம் ஆண்டு 20 கோடியே 12 லட்சத்து 27 ஆயிரத்து 181 சாராயப் போத்தல்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன் அவற்றில் 52 வீதமானவை 180 மில்லிலீற்றர் சாராயப் போத்தல்கள் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இதனால், சுற்றாடலுக்கு ஏற்படும் அழிவைத் தடுப்பதற்காக உடனடியாக 180 மில்லி லீற்றர் போத்தல்களைத் தடைசெய்ய நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

பயன்படுத்தப்படும் சாராயப் போத்தல்களில் 5 வீதம் மறுசுழற்சி செய்யப்படுவதில்லை. சாராயப் போத்தல்களால் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்பு சம்பந்தமாக உழவர்கள், கமத்தொழில் அமைப் புகள் உட்பட பலதரப்பினர் குற்றம் சுமத்தி வருகின்றனர் எனவும் அமைச்சர் மேலும் தெரி வித்துள்ளார்.



# யாழ்ப்பாணம் அரியாலை கடற்பரப்பில் 6.8 கோடி ரூபா கேரள கஞ்சா மீட்பு

யாழ். அரியாலை கடற்பரப்பில் படகு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 229 கிலோகிராம் கேரள கஞ்சா கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

வடக்கு கடற்படை கட்டளைத் தலைமையகத்தின் சிறப்புப் பிரிவு நேற்று யாழ். அரியாலைப் பகுதி மற்றும் அதனைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் சிறப்புத் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்ட போது கடற்படை நடவடிக்கை காரணமாக கரைக்கு கொண்டுவர முடியாது கைவிடப்பட்ட படகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 105 பொதிகளில் இடப்பட்டிருந்த சுமார் 229 கிலோகிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் தற்போதைய பெறுமதி 6 கோடியே 80 லட்சம் ரூபாவுக்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட கேரள கஞ்சா மற்றும் படகு என்பன மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் வரை கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

# முதலீட்டாளர்கள் முறைப்பாடுகளைத் தெரிவிக்க வட்ஸ் அப் இலக்கம் வழங்கிய வடக்கு ஆளுநர்






வடக்கில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்கள் எதிர்நோக்குகின்ற நிர்வாக ரீதியான பிரச்சினைகள் தொடர்பில் தனக்கு முறைப்பாடுகளை வழங்க வட்ஸ்அப் இலக்கத்தை வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் தலைமையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற வடமாகாணத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினை தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு இலக்கத்தை வழங்கியுள்ளார். நிகழ்வில் பங்குபற்றிய முதலீட் டாளர்கள் தமது குறைகளை முன்னோக்கி கொண்டு செல் வதற்கு வடக்கில் உள்ள அரச அதிகாரிகளின்செயற்பாடுகள்போதாதுஎன்றகுற்றச்சாட்டை முன்வைத்தனர். தமது உற்பத்தித் துறைகள் தொடர்பில் சட்டரீதியான ஆவணங்கள் மற்றும் தொழில் விரிவு படுத்துதல்ளை மேற்கொள்வதற்கு கீழ்மட்ட அதிகாரிகளின் செயற்பாடுகள் தமக்கு மன வருத்தத்தை ஏற்படுத்துகின்றன என மன்னார் மாவட்டத்தில் இருந்து கலந்து கொண்ட முதலீட்டாளர் ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அதுமட்டுமல்லாது யாழ்ப்பாண வணிகர் சங்கமும் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பில் கூறியதுடன், வடக்கிலுள்ள வளங்களைப் பயன்படுத்துவதற்கு இங்குள்ள முதலீட்டாளர்கள் தயாராக இருக்கின்ற நிலையில் அதனைப் பெற்றுத்தர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். இதன்போது பதிலளித்த வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, தங்களின் கோரிக்கைகள் மற்றும் முறைப்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்கு தான் தயாராக இருக்கிறேன் எனவும் எனவும், அதுதொடர்பில்தனதுவட்ஸ்அப் இலக்கத்துக்கு முறைப்பா டுகளை வழங்க முடியும் எனக் கூறி இலக்கத்தை வழங்கியுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.11.2021இல் வெளியிடப்பெற்றது.

# காலைக்கதிருக்காக கானமயில்நாதன் செய்த பிரதிக்ஞை!

**‘காலைக்கதிர்’ நாளிதழ் 06.11.2016 அன்று மலர்கின்றமையை ஒட்டி அதற்கு முதல் நாள் மாலையில் ‘விடியல் வீச்சு!’ சிறப்பிதழ் வெளியீடு இடம்பெற்றது. அந்த இதழின் முன்பக்கத்தில் ‘நமது பிரதிக்ஞை’ என்ற பெயரில் காலைக்கதிரின் நோக்கங்களை வடிவமைத்து வெளியிட்டிருந்தார் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன். அது அவரது பெயருடன் பிரசுரமாகியிருந்தது. அவர் மறைந்த இந்தச் சமயத்தில் அதனை மீள நினைவூட்டுவது பொருத்தமானது. அது இங்கு அப்படியே பிரசுரமாகின்றது.**



ஆசிரிய பீட அங்குரார்ப்பணத்தின் பின்னர் காலைக்கதிர் குடும்பத்தின் நடுநாய கமாக நம் ஸ்தாபக ஆசிரியர்.

ஆதவனே அகிலநாயகன்.அவனின்றி அசையாது அவனி. அவனே உலக காரணன். அணுவில் இருந்து அண்டம் வரை அனைத்துக்கும் உயிரூட்டுபவனும்அவனே.தன்பொற்கிரணங்களால் நானிலத்தைச் செழுமைப்படுத்தும் பெருமை வெய்யோனுக்கே உரியது.

பரிதியின் கதிர்கள் பூமிப்பந்தில் சக்தியைப் பதிக்க வழி செய்கின்றன. கதிரவனின் அந்தச் சக்தியை உள்வாங்கி அமுதுக் கதிராகத் தந்து நிமிர்கின்றன நெற்பயிர்கள்,

கதிரவனின் கதிர்கள் போன்று – களனியிலே பூரித்துத் தலை சாய்க்கும் நெற்கதிர்கள் போன்று – இன்று உங்கள் கரம் தவழ்கிறது ‘காலைக்கதிர்’.

தங்குதடையின்றி – காலகதி பிசகாமல் – காலைக் கதிரவனின் கதிர்கள் பார் மீது பரவுவது போல, ‘காலைக்கதிரும்’ நாளாந்தம் தவறாமல் விடிகாலையில் உங்களை நாடிவரும்.

இன்று உலகின் இயக்கமே கதிர்கள்தாம். கண்ணுக்குத் தெரியும் ஒளிக்கதிர் மட்டுமல்ல, நாம் தொட்டுப் பட்டுணரும் வெப்பக்கதிர் மட்டுமல்ல, நம் கண்களுக்குப் புலனாகாத – உணர்வுகளால் உணர முடியாத – பலவிதமான கதிர்கள், பல அலை வீச்சங்களில் விண்ணுலக



’காலைக்கதிர்’ மலர்வினை ஒட்டிய ’விடியல் வீச்சு!’ நாளிதழை அப்போதைய எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் வெளியிட, வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் முதல் பிரதியைப் பெறுகின்றார். அருகில் ’காலைக்கதிர்’ நாளிதழின் ஸ்தாபக ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன்.

அண்டத்தின் விசாலந்தொட்டு, நுண்ணுலக அணுவின் மூலம்வரை, நம்மைச் சூழப் பரவியா பித்து – நின்று, இன்று உலகையே இயக்கிக் கொண்டிருக்கின்றன என்பதே விஞ்ஞான மெய்ம்மை. வெளியே புலனாகாமல், மனித பிரக்ஞைக்குத்தோற்றாமல், சூட்சுமமாகச்செயற்படும் கதிர்கள் போன்று உங்களின் ’காலைக்கதிரும்’ தன்னைப் பிரபலப்படுத்தாமல், அதிகப்பிரசங்கித்தனமோ, ஆர வாரமோ இல்லாமல், அமைதியாக, அரிய காரியங்களை அதற்கே உரித்தான தனித்துவத்துடன் ஆற்றுமென இந்த உதய வேளையில் உறுதி கூறுகின்றோம். பத்திரிகை காலத்தின் கண்ணாடி. ஒரு கருத்துருவாக்கி. அதற்கு அபாரமான சக்தி உண்டு. வாசகனின் ஆன்மாவைப் பற்றி, அவனை ஆகர்ஷித்து, நெறிப்படுத்தும் வழிகாட்டி அதுவே. வாசகனின் இருண்ட மனக் குகைக்குள் வெளிச்சத்தைப் பாய்ச்சி, மாயையைப் போக்கி, கனவுகளைக் கலைத்து, யதார்த்தத்தை விளக்கி, சிந்தனை, விழிப்புணர்வைத் தூண்டி, நம்பிக்கையை வளர்த்து நெறிப்படுத்தும் நல்லாசானும் அதுவே.

சமூகப் பிரக்ஞையுடனும், இனவுணர்வுடனும் தனது மக்களின் சமூக விடுதலைக்காகக் கிளர்ந்தெழும் ஒரு பத்திரிகை, தனது மக்களின் – தனது சமூகத்தின் – இருப்புக்கே கவசமாகவும் காவலனாகவும் உயர்கின்றது. அந்த அரும் பணியே காலைக்கதிரின் பிரதான இலக்கு. ஈழத் தமிழினத்தின் ஏழு தசாப்தகால உரிமைப் போராட்டமும் அதற்காக அந்த இனம் செய்த – புரிந்த – வேள்வித் தவமும் சொற்களில் அடக்கிவிட முடியாத உயரிய தியாகமும் அவமாகிப் போகாமல் அர்த்த முள்ளனவாக வேண்டும்.



’காலைக்கதிர்’ ஆசிரியர் பீட அங்குரார்ப்பணத்தின் போது பத்திரிகையின் சார்பில் சங்கற்பிக்கும் கானமயில்நாதன் தம்பதியர்.

அதற்காக உரத்துக் குரல் கொடுக்கும் அதே சமயத்தில், உரிமைப் போரில் ஆகுதியானோரின் வேள்வித் தீயில் சுயநலவாதிகள் பலர் அரசியல் குளிர்காய்வதையும் காலைக்கதிர் உரிய முறையில் பிய்த்து, பிளந்து அம்பலப்படுத்தும்.

’’உண்மை – நேர்மை – பக்கம் சாராமை’ என்ற தாரக மந்திரத்தை வரித்துக்கொண்டு, ஒரு புதிய – நீதிநாடி – நேரிய – சீரிய – ஊடக தர்மத்தைத் தனது பாதையாக வகுத்துக்கொண்டு, நமது இனத்தின் விடிவுக்காகவும், உயர்ந்த சமூக மாற்றத்துக்காகவும் இன, மத நல்லிணக்கத்துக்காகவும் அர்ப்பணிக்கும் வகையில் காலைக்கதிர்’ தளராது பணி யாற்றும் என்று இந்த உயிர்ப்பு வேளையில் பிரதிக்ஞை செய்கின்றோம்.

**ம.வ.கானமயில்நாதன்**
**பிரதம ஆசிரியர்.**

# ‘காலைக்கதிரில்’ கானம் எனும் காவியம்


ஆசிரியர்பணியில்கானமயில்நாதன்


அங்குரார்ப்பணத்தின்போது ஆசிரியர்கள் ஆலோசனை


ஆரவாரமின்றி அரும்பணியாற்றிய பெருந்தகை


யாழ். ஊடக அமையத்தில் கௌரவிக்கப்பட்டபோது...


‘விடியல் வீச்சு’ வெளியீட்டில்...


அங்குரார்ப்பணத்தின்பின் ஸ்தாபக ஆசிரியரும் அவர் அணியினரும்

# அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் அரும்பாணியாற்றிய ஆசிரியர்!

## ஊடக அமையம் கண்ணீர்க் காணிக்கை

அச்சுறுத்தல்களால் அடிபணிய வைக்கலாமென்று பலரும் எதிர்பார்த்திருந்த போதும் தனது ஒற்றை பேனாவின் முனையை நம்பி கொலை வாளின் கீழாக ஊடகப்பணியாற்றியவர் ம.வ.கானமயில்நாதன் என யாழ் ஊடக அமையம் கண்ணீர் காணிக்கையை அறிக்கையாக வெளியிட்டுள்ளது.

மூத்த ஊடகவியலாளர் ம.வ.கானமயில்நாதன் இன்று திங்கட்கிழமை தனது 79ஆவது வயதில் காலமானதையிட்டு யாழ் ஊடக அமையம் வெளியிட்ட ஊடக அறிக்கையிலே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் முழு வடிவம் வருமாறு:-

ஈழ விடுதலைப் போராட்டத்தின் சத்தமற்ற ஊடக சாட்சியங்களுள் ஒன்றாக இருந்து மறைந்த மூத்த ஊடகவியலாளர் ம.வ.கானமயில்நாதன் அவர்களிற்கு யாழ்.ஊடக அமையம் தனது அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

ஊடகப் பரப்பில் உரிமை கோரப்படாத மரணங்களும் காணாமல் ஆக்கப்படுதல்களும் அச்சுறுத்தல்களும் நிரம்பி வழிந்த யாழ்ப்பாண மண்ணில் சோரம் போகாது தனது ஊடகப் பணியை உதயன் நாளிதழில் அதன் பிரதம ஆசிரியராக இருந்து ஆற்றியவர் ம.வ.கானமயில்நாதன்.

அச்சுறுத்தல்களால் அடிபணிய வைக்கலாமென்று பலரும் எதிர்பார்த்திருந்த போதும் தனது ஒற்றை பேனாவின் முனையை நம்பி, கொலைவாளின் கீழாக ஊடகப்பணியாற்றியவர் ம.வ.கானமயில்நாதன். தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்ட பரப்பில் ஊடக பங்களிப்பு பற்றிய பதிவுகளில் என்றுமே விலக்கப்பட முடியாத சக்திகளுள் ஒருவராக அவர் இருந்து வந்திருந்தார். அவரது ஊடகப்பள்ளியில் புடம் போடப்பட்ட நூற்றுக் கணக்கான ஊடகவியலாளர்கள் உலகெங்கும் நிரம்பிப்போயுள்ளனர்.

2005இன் பிற்பகுதியில் ஜனநாயகம் பேசுகின்ற துப்பாக்கிதாரர்களது கொலை கரங் களில் இருந்து தப்பிக்க அவர் வருடக் கணக்கில் தனது அலுவலகத்தினுள்ளேயே முடங்கிக்கிடந்தமையும் நாள் தோறும் உதயன் நாளிதழை வெளிக்கொணர்ந்தமையுமான வரலாறுகள் இளம் ஊடக சமூகம் கற்றுக்கொள்ளவேண்டியதொன்று.

உதயனில் வெளிவந்த ஆசிரிய தலையங்களை வாசித்தே இதனை கானத்தார் தான் எழுதியதாக அடித்துச்சொன்ன தேசிய தலைமை பற்றி அவருக்கு என்றுமே பெருமையும் புளங்காகிதமுமுண்டு.

உதயன் பத்திரிகை 1985ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட முதல் தனது வாழ்வின் இறுதிக்காலம் வரையில் நீண்ட காலம் பிரதம ஆசிரியராக கடமையாற்றியுள்ளமை ஒரு வரலாற்றுப் பதிவே.

நெருக்கடியான கால கட்டத்தில் தாயகத்தில் இருந்து ஊடகப்பணியாற்றிய மிக சொற்ப அளவிலான மூத்த ஊடகவியலாளர்களுக்குள் கானமயில்நாதனும் ஒருவர்.

பிரான்ஸின் தலைநகரான பரிஸில் கடந்த 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதியன்று எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் தன்னார்வ அமைப்பின் விருது வழங்கும் விழாவில், விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அதேவேளை ஊடகத்துறையில் தேசியம் சார்ந்து நெருக்கடியாக சூழலில் அர்ப்பணிப்புடன் கடமையாற்றியமைக்காக கடந்த 2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதி யாழ்.ஊடக அமையத்தினால் அவர்வாழும்போதேகௌரவிக்கப்பட்டமையினை பெருமையுடன் நினைவுகூர்கின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் பிரிவால் துயருற்றிருக்கின்ற குடும்பத்தவர்களிற்கு ஆறுதலையும் யாழ்.ஊடக அமையம் தெரிவித்து நிற்









# மரண அறிவித்தல்

மலர்வு
25 . 07 . 1942



உதிர்வு
22 . 11 . 2021

## அமரர்

# மருதப்பு வல்லிபுரம் கானமயில்நாதன்

### (ஓய்வுபெற்ற பிரதம ஆசிரியர் - உதயன் - சஞ்சீவி மற்றும் காலைக்கதிர் பத்திரிகைகள்)

வட்டு. மேற்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், 495/14, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட ம.வ. கானமயில்நாதன் 22.11.2021 அதிகாலை மாவைக் கந்தனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருதப்பு – செல்லம் தம்பதிகள், சண்முகம் – அரியக்குட்டி தம்பதிகளின் பேரனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் – வள்ளியம்மை தம்பதிகளின் தவப்புதல்வனும் காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு – மெல்லியம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சாரதாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற விமலாதேவி மற்றும் பகீரதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் தயாநாதனின் (ஜேர்மனி) மைத்துனரும், லோகதாசன், தருசினி, கதீஜா ஆகியோரின் தாய்மாமனும், வளர்ப்புத் தந்தையும் காயத்திரி, மணிவண்ணன், கோணேஸ்வரன் ஆகியோரின் பெரியதந்தையும் காலஞ்சென்றவர்கவர்களான அமரர், கஜீன்ந்த் மற்றும் சஞ்யிதா, கிசாந்த், சாகரி, சாரணி, மதுரிகா, லுயிசன், கபிசாந்த், தக்சினி ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற கண்மணி மற்றும் நவமணி, காலஞ்சென்ற பராசக்தி மற்றும் வைத்தியநாதன் , காலஞ்சென்ற தேம்பாமலர் மற்றும் பத்மாவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை (23.11.2021) காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள் கிறோம்.

**தொடர்புகளிற்கு:-**

தயாநாதன் (ஜேர்மனி) - 004971150456347
லோகதாசன் (சுவிஸ்) - 0041797437993
அன்புரு ( இலங்கை) - 0094775002337
தருசினி (சுவிஸ்) - 0041766666663
கதீஜா (ஜேர்மனி) - 004917661162864

**தகவல் : குடும்பத்தினர்**